[1972 நவம்பர் 13

Repatriates' Co-operative Finance and Development Bank, Madras

* 278 Q.—THIRU V. ISVARMURTI : Will the Hon. the Minister for Harijan Welfare be pleased to state the details of the assistance given to Burma Repatriates by the Repatriates' Co-operative Finance and Development Bank, Madras during 1971–72?

சென்னை அகதிகள் கூட்டுறவு நிதி வசதி வளர்ச்சி வங்கி

திரு. வ. ஈஸ்வரமூர்த்தி : மாண்புமிகு அரிசன நல அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :—

சென்னை அகதிகள் கூட்டுறவு நிதி வசதி வளர்ச்சி வங்கி 1971–72-ல் பர்மா அகதிகளுக்கு வழங்கியுள்ள உதவித் தொகை குறித்த விவரங்கள் யாவை ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : 1971—72-ம் ஆண்டு, அகதிகள் கூட்டுறவு நிதி வசதி—வளர்ச்சி வங்கி, பர்மா அகதிகளுக்கு நேரடிக் கடன்களாக ரூ. 79.57 லட்சம் வழங்கியுள்ளது.

Shark liver oil

* 279 Q.—THIRU V. ISVARMURTI : Will the Hon. the Minister for Harijan Welfare be pleased to state—

(a) whether Shark liver oil is produced in this State ; and

(b) if so, the details thereof?

சுறு மீன் எண்ணெய்

திரு. வ. ஈஸ்வரமூர்த்தி : மாண்புமிகு அரிசன நல அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதில் அளிக்க வேண்டுகிறேன் ;

(அ) இம்மாநிலத்தில் சுறு மீன் எண்ணெய் (Shark Liver Oil) உற்பத்தி செய்யப்படுகிறதா?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : (அ) தூய்மைப் படுத்தப்படாத சுறு மீன் எண்ணெய் (Shark Liver Oil) மட்டுமே தமிழ்நாட்டில் உற்பத்தி செய்யப்படுகிறது.

(இ) சுறுமீன் ஈரலிலிருந்து சுறுமீன் எண்ணெய் உற்பத்தி செய்யப்படுகிறது. சுறு ஈரல்கள் வேகவைக்கப்பட்டு, மீனளத்

1972 நவம்பர் 13]

துறை பொறுப்பில் உள்ள சுறு மீன் எண்ணெய் வடிக்கும் நிலையங்களில் தூய்மைப்படுத்தாத நிலையில் உள்ள எண்ணெய் பிரித்தெடுக்கப்படுகிறது. மீனளத் துறை இந்த சுறு மீன்களின் ஈரல்களை வாங்குகிறது. தூய்மைப்படுத்தப்படாத எண்ணெய் பிரித்தெடுக்கப்பட்டு பீப்பாய்களில் சிப்பஞ் செய்யப்பட்டு, கோழிக்கோட்டில் உள்ள 'கேரளா சோப்ஸ் அண்டு ஆயில் லிமிடெட்' என்னும் நிறுவனத்திற்கு விற்பனை செய்யப்படுகிறது. இது கேரள அரசின் தொழில் துறையைச் சேர்ந்த ஒரு நிறுவனமாகும். அங்கு மீன் எண்ணெய் தூய்மைப்படுத்தப்பட்டு வேலை நிறைவு பெற்ற பொருளாக (finished product) அங்கே விற்கப்படுகிறது. தூய்மைப் படுத்தப்படாத மீன் எண்ணெய் தற்போது கிலோ கிராம் ரூபாய் 2.76-க்கு விற்பனை செய்யப்படுகிறது.

திரு. வ ஈஸ்வரமூர்த்தி : தலைவரவர்களே, தமிழ் நாட்டிற்கு இந்த எண்ணெய் உற்பத்தியின் மூலம் எவ்வளவு வருமானம் வருகிறது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : தலைவரவர்களே, 1970—71-ம் ஆண்டில் இதிலேயிருந்து வடித்தெடுத்த எண்ணெய் 9121 கிலோகிராம் ரூ. 26,035 கிடைத்தது. 1971-72-ம் ஆண்டு 14,257 கிலோ கிராம் எண்ணெய் வடித்தெடுக்கப்பட்டது. 4 ஆயிரம் கிலோ கிராம் மீன் எண்ணெய் மண்டபத்தில் எடுக்கப்பட்டது. ஆனால், அது நமது மாநிலத்திலேயே பயன்படுத்திக்கொள்ளப் பட்டது.

திரு. டி. சந்தோஷம் : தலைவரவர்களே, நம்முடைய தமிழ் நாட்டைப் பொறுத்த மட்டில், இந்த எண்ணெய் உற்பத்தி அரசாங்கத்தின் சார்பாக நடைபெறுகிறதா ? அல்லது தனியாருக்குக் குத்தகைக்கு விடப்படுகிறதாவென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : தலைவரவர்களே, நமது துறையின் மூலமாக இந்த எண்ணெய் எடுக்கப்படுகிறது. க்ரூட் ஆயிலாக எடுக்கப்படுகிறது. அது சுத்தமாக, ஃபினிஷ்ட் பிராடக்டாக, ஆக்கப்படுவதில்லை. க்ரூட் ஆயிலாகக் கேரளாவிற்கு அனுப்புகிறோம். கேரளியர்கள் பயன்படுத்திக்கொள்ளுகிறார்கள். நமக்குப் பணம் கொடுத்துவிடுகிறார்கள்.